617



ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

पिवन्ति नद्यः स्वयमेव नांभः स्वयं न खादन्ति फलानि वृक्षाः ।
नादन्ति सस्यं खलु वारिवाहाः परोपकाराय सतां विभूतयः ॥

பிபந்தி நத்ய: ஸ்வயமேவ நாம்ப: ஸ்வயம் ந காதந்தி பலானி வ்ருக்ஷா: । நாதந்தி ஸஸ்யம் கலு வாரிவாஹா: பரோபகாராய ஸதாம் விபூதய: ॥

நதிகள் தங்களிடமிருக்கும் ஜலத்தைப் பிறருக்குக் கொடுக்கின்றனவேயன்றி தாங்களுபயோகப்படுத்திக் கொள்ளுகிறதில்லை. அவ்விதமே விருக்ஷங்களும் கனிகளைத் தாங்கள் புசிக்காமல் பிறருக்கே அற்பணம் செய்கின்றன. மேகங்களும் உசிதமான காலங்களில்ஜலத்தைவர்ஷித்துப் பயிர்களை விருத்திசெய்து தாங்கள் அவைகளை ஒன்றும் செய்யாமல் பிறருக்கு உபயோகப்படும்படி செய்கின்றன, மஹான்களுடைய ஐச்வர்யங்களெல்லாம் பரோபகாரத்தின் பொருட்டே ஆகின்றன.

ஸ்ஜ்ஜனங்களின் ஐச்வர்யம் பூராவும் பிறருடைய ஸௌக்கியத்தின் பொருட்டே உபயோகப்படுகின்றது. அவ்விதம் உபயோகப்படுவதும் அவர்கள் விரும்பித்தான் கொடுப்பதென்பதில்லை. விரும்பாவிட்டாலும் இவர்களாகவே கொடுக்கிறார்கள். அஃதெவ்வனமென்றால்:—

पद्माकरं दिनकरो विकचं करोति
चन्द्रो विकासयति कैरवचक्रवालम् ।
नाभ्यर्थितो जलधरोऽपि जलं ददाति
सन्तस्स्वयं परहिते विहिताभियोगाः ॥

பத்மாகரம் தினகரோ விகசம் கரோதி
சந்த்ரோ விகாஸயதி கைரவசக்ரவாளம் ।
நாப்யர்த்திதோ ஜலதரோऽபி ஜலம் ததாதி
ஸந்த: ஸ்வயம் பரஹிதே விஹிதாபியோகா: ॥

கதிரவன் தாமரை ஓடையை மலரும்படி செய்கிறான். சந்திரன் ஆம்பல் கூட்டங்களை புஷ்பிக்கும்படி செய்கிறான். நாம் யாசிக்காவிட்டாலும் மேகம் ஜலத்தைத்தானுகக் கொடுக்கின்றது. ஆகையால் ஸஜ்ஜனங்கள் தாமாகவே பிறருக்கு உதவிபுரிவதில் எப்போதும் முயற்சியுடையவர்களாயிருக்கிறார்கள் என்று ஒரு பெரியாரும் கருதியிருக்கிறார். நாமும் பிறரிடமிருந்து ப்ரதிப்பிரயோஜனத்தை எதிர்பாராமல் நம்மாலியன்றவரையில் பரோபகாரத்தை அவசியம் செய்யவேண்டும்.

உபபத்திராதிபர்.

Fs18

ஆர்ய தர்மம்.
பிரபவ-௵ புரட்டாசி-௴ ௯௳

# காந்தி கூறும் விதவாவிவாஹத்திற்கு மறுப்பு.

சென்ற ஆவணிமீ 22உயில் சென்னை பச்சையப்பன் கலாசாலையில் மாணவர்களுக்கு புத்திமதி என்று தலையங்கமிட்டு காந்தியால் செய்யப்பட்ட பிரஸங்கத்தை மித்திரனின் வாயிலாகக் கண்ணுற்றோம்.

அதில் பல விஷயங்களைப்பற்றிப் பேசியிருந்தாலும் விதவா விவாஹம் என்கிற விஷயத்தைப்பற்றிப் பேசியிருப்பதைப் பார்த்தவர்களுக்கு கலியின் கொடுமை எவ்வளவு தூரம் நம் ஸனாதந தர்மத்தைக் கெடுக்க முன்வந்திருக்கிறதென்று நன்கு புலப்படும்.

கலாசாலை மணவர்களுக்குக் காந்தி செய்யும் உபதேசமாவது—

(1.) உங்களிற் பலர் விவாகமாகாதவர்களென்று நான்நம்புகிறேன். உங்களிற் பலர் பிர்மசாரிகளென்றும் நினைக்கிறேன். விதவையில்லாதவளை மணப்பதில்லை என்றுநீங்கள் தீர்க்கமான முடிவு செய்து கொள்ளவேண்டுமென்று நான்விரும்புகிறேன், கைம்பெண்கள் கிடைக்காவிட்டால் கல்யாணமே செய்துகொள்ளாதீர்கள் என்பதே.

காந்தி அவர்கள் விவாகமென்கிற இந்தக்கர்மாவை வைதிகமான ஸம்ஸ்காரமாகக் கருதுகிறாரா? அல்லது லௌகிகமாகச் செய்யப்படும் பல கிரீடைகளில் இதுவும் ஒன்று என்று கருதுகிறாரா? சில ஸமயங்களில் தர்மசாஸ்திரங்களில் அதிகப்பயிற்சிப் பெற்ற பண்டிதர்கள்கூட தைர்யமாய் முன்வந்து பேச ஸந்தேகப்படும்விஷயத்தை இவர் 'சாஸ்திரத்தில்' என்றுகூறுவதால் வைதிக ஸம்ஸ்காரமாக அங்கீகரிக்கலாமென்று நினைக்கிறேன. அப்படி இவர் அங்கீகரிப்பின் அதற்காக ஏற்பட்டுள்ள விதிவிலக்குகளைப்பின்பற்றி அவைகளை அநுஸரித்துக் கூறவேண்டுமேயன்றி

அவைகளை புறக்கணித்துத் தம்மிஷ்டம்போல் தோன்றியபடி எல்லாம் ஸபையில் வெளியிட முன் வருவது அறிஞர்களுக்கழல்ல. இப்பொழுது விவாகமாகாதமாணவர்களுக்கு விதவையைவிவாகம் செய்து கொள்ளுங்கள் என்று எப்படி இவர் உபதேசம் செய்கிறார். இவர் செய்யும் இந்த அதர்மோபதேசத்திற்கு எந்த சாஸ்திரத்தில் ப்ரமாணமிருக்கின்றது. அப்படியிருப்பின் அந்த வசனங்களையும் ஏன் எடுத்துக் காட்டியிருக்கக்கூடாது. தர்மசாஸ்திரங்களின் தத்வார்த்தத்தை நன்கறிந்தவர்போல் உபன்யாஸ காலங்களில் சாஸ்திரம்என்கிற பொருளில்லாதகேவலஎழுத்துக்களை மாத்திரம் சொல்லி ஸாமான்யர்களான ஸாது ஜனங்களை எதற்காக வஞ்சித்துக் :கெடுக்கவேண்டும். விவாஹமென்கிற இந்த ஸம்ஸ்காரத்தைப்பற்றி பல மகரிஷிகளும் ஸ்மிருதிகளில் ஸ்பஷ்டமாயும் விஸ்தாரமாயும் வெளியிட்டிருக்கிறார்களே. லோகோபகாரத்தின் பொருட்டென்று பறையரைந்து பல மேடைகளிலும் தர்மோபதேசம் செய்ய முன் வருகிறவர்கள் சாஸ்திரீயமானவிஷயங்களைப்பற்றிப் பேசுங்கால் முந்தி சாஸ்திரங்களுடைய அபிப்பிராயத்தை நன்கறிவித்தும் பிறகு அதையனுஸரித்துத் தமதபிப்பிராயத்தையோ, யுக்தியையோ, வெளியிட்டால் பலருக்கும் உபகாரத்தின் பொருட்டாகும். அவ்விதமின்றிசாஸ்திரத்திற்கு விரோதமாய் செய்யப்படும் இந்த உபதேசமானதுலோகாபகாரத்தின் பொருட்டாகுமேயல்லாமல் அற்பமேனும் உபகாரமேற்படாதென்பது திண்ணம். இங்கு காந்தியிடம் அபிமானமுள்ள சில ஜனங்களுக்கு விதவாவிவாகம் கூடாதென்று எந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று சங்கை ஏற்படலாம். இந்தக்காரியம் மிகவும் கெட்டகாரியம் என்றும் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் கொடிய துக்கத்திற்குக் காரணமாகுமென்றும் ஆகையால்தான் நம்முன்னோர்கள் இந்த அனுஷ்டானத்தை அங்கீகரிக்காமல் நாளது வரையில் நடத்திவந்திருக்கிறார்களென்றும் உலகிலுள்ள அனுபவத்தாலேயே நன்கு அறிந்துகொள்ளலாம். சாஸ்திரங்களின் ஆதாரமில்லாமல்தம்வாக்கையேவேதவாக்காகக்கருதித் தோன்றியபடியெல்லாம் உபதேசிப்பது இக்காலத்திலுள்ள மஹரிஷிகளின் செய்கையே அல்லாமல் நம் முன்னோர்கள் சாஸ்திரப் பிரமாணமில்லாமல் ஒரு விஷயத்தையும் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரமாட்டார்கள்.

Fo20



விதவாவிவாகம் கூடாதென்கிற பிரகிருத விஷயத்திலேயே சாஸ்திரப்பிரமாணம் இருக்கிறதா என்பதை இப்பொழுதே கவனித்துப்பார்ப்போமாகில் கூடாதென்றே சாஸ்திரங்கள் ஸ்பஷ்டமாகக் கூறுகின்றன.

அவையாவன—

मृते भर्तरि या नारी ब्रह्मचर्यव्रते स्थिता ।
सा मृता लभते स्वर्गं यथा ते ब्रह्मचारिणः ॥ पराशरः ।
एक एव पतिर्नार्या यावज्जीवं परायणम् ।
मृते जीवति वा तस्मिन्नापरं प्राप्नुयान्नरम् ॥
अभिगम्य परं नारी पतिष्यति न संशयः । महाभारतम् ।
ऊढायाः पुनरुद्वाहं ज्येष्ठांशं गोवधं तथा ।
कलौ पञ्च न कुर्वीत भ्रातृजायां कमण्डलुम् ॥ स्मृतिः ।

𑌮𑍃𑌤𑍇 𑌭𑌰𑍍𑌤𑌰𑌿 𑌯𑌾 𑌨𑌾𑌰𑍀 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌵𑍍𑌰𑌤𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌸𑌾 𑌮𑍃𑌤𑌾 𑌲𑌭𑌤𑍇 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌯𑌥𑌾 𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑌃 ॥
𑌪𑌰𑌾𑌶𑌰𑌃 ।

𑌏𑌕 𑌏𑌵 𑌪𑌤𑌿𑌰𑍍𑌨𑌾𑌰𑍍𑌯𑌾 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌂 𑌪𑌰𑌾𑌯𑌣𑌮𑍍 ।
𑌮𑍃𑌤𑍇 𑌜𑍀𑌵𑌤𑌿 𑌵𑌾 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌾𑌪𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌨𑍍𑌨𑌰𑌮𑍍 ॥
𑌅𑌭𑌿𑌗𑌮𑍍𑌯 𑌪𑌰𑌂 𑌨𑌾𑌰𑍀 𑌪𑌤𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ 𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑌮𑍍
𑌊𑌢𑌾𑌯𑌾𑌃 𑌪𑍁𑌨𑌰𑍁𑌦𑍍𑌵𑌾𑌹𑌂 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌂𑌶𑌂 𑌗𑍋𑌵𑌧𑌂 𑌤𑌥𑌾 ।
𑌕𑌲𑍌 𑌪𑌞𑍍𑌚 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌜𑌾𑌯𑌾𑌂 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌮𑍍 ॥ 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 ।

இந்த வசனங்களால் ஸ்திரீகளுக்கு ஒரு தடவைதான் விவாகமென்றும் அவ்விதம் விவாகமான பிறகு அந்தப்பதி இருந்தாலும் அல்லது மரித்துவிட்டாலும் மறு பதியை மணம் புரியக்கூடாதென்றும் பிர்மசர்ய விருதத்தில்தான் அவளிருக்கவேண்டுமென்றும் அவ்விதமிருப்பதால் பிர்மசாரிகளைப்போல் மரித்த பிறகு இவளும் ஸ்வர்க்கத்தையடைகிறாள் என்றும் ஸ்பஷ்டமாய் வெளியாகின்றது. இவ்வசனங்கள் முன் யுகங்களுக்காக ஏற்பட்டனவேயன்றி இந்தக் கலியுகத்திற்கு ஏற்பட்டகல்லவென்று ஒரு ஸமயம் சங்கிப்பதற்கு இடமில்லாமல் ऊढायाः पुनरुद्वाहम् 𑌊𑌢𑌾𑌯𑌾𑌃 𑌪𑍁𑌨𑌰𑍁𑌦𑍍𑌵𑌾𑌹𑌂 ஒரு தட்வை விவாகமான ஸ்திரீக்கு மறு மணம் கலியில் செய்யக்கூடாதென்று "कलौ न, 𑌕𑌲𑍌 𑌨" என்று

F21



குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் இக்காலத்திலும் விதவாவிவாஹம் கூடாதென்றே தெரிகிறது.

अज्ञातश्च द्विजो यस्तु विधवामुद्वहेद्यदि ।
परित्यज्य च तां चैव प्रायश्चित्तं समाचरेत् ॥ आश्वलायनः ।

அஜ்ஞாதஸ்ச த்விஜோ யஸ்து விதவாமுத்வஹேத்யதி ।
பரித்யஜ்ய ச தாம் சைவ ப்ராயஸ்சித்தம் ஸமாசரேத் ॥
ஆஸ்வலாயந: ।

ஒரு துவிஜன் அறியாமல் விதவையைவிவாகம் செய்துகொண்டானேயானால் அவளை விலக்கிவிட்டு அந்தத் தோஷத்தைப் போக்க வேண்டி சாஸ்திரங்களில் கூறப்பட்ட பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ளவேண்டும்.

ஸமாசரேத் என்று கூறியிருப்பதால் எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்விதம் பூர்ணமாகச் செய்யவேண்டுமென்றும் ஆச்வலாயந மஹரிஷி அறிவிக்கிறார்.

न द्वितीयश्च साध्वीनां कश्चिद्भर्तोपदिश्यते । मनुः ।

ந த்விதீயஸ்ச ஸாத்வீநாம் கஸ்சித்பர்தோபதிஸ்யதே । மநு: ।

ஆஸ்திகவம்சத்தில் ஜனித்த உத்தமகுணமுடைய பதிவிரதாஸ்திரீகளுக்கு முந்தி விவாகமான பதியின் காலம் சென்று விட்டால் மறுபடியும் இரண்டாவது பர்த்தாவை அடையும்படி சாஸ்திரங்களில் உபதேசிக்கப்படவில்லை என்று மனு கூறுகிறார்.

नतु नामापि गृह्णीयात् पत्यौ प्रेते परस्य तु ।

நது நாமாபி க்ருஹ்ணீயாத் பத்யௌ ப்ரேதே பரஸ்ய து ।

தன் பர்த்தா மரித்த பிறகு பர புருஷனுடைய பெயரைக்கூடத் தன் வாயாலுச்சரிக்கக் கூடாதென்று மற்றொரு ஸ்மிருதி மொழிகின்றது.

मृतं भर्तारमादाय ब्राह्मणी वह्निमाविशेत् ।
जीवन्तीचेत् त्यक्तकेशा तपसा शोषयेद्वपुः ॥ वसिष्ठः ।

ம்ருதம் பர்தாரமாதாய ப்ராஹ்மணீ வஹ்நிமாவிஸேத் ।
ஜீவந்தீசேத் த்யக்தகேஸா தபஸா ஸோஷயேத்வபு: ॥
வஸிஷ்ட: ।

F022



பிராமணஸ்திரீயானவள் மரித்த பர்த்தாவுடன் கூட அக்னிப் பிரவேசம் செய்ய வேண்டும். அவ்விதம் செய்யாமல் ஜீவித்திருந்தால் கேசங்களை எடுத்துவிட்டு தனக்குரிய தவத்தால் சரீரத்தை மெலியும்படி செய்யவேண்டும் என்று வியாசர் கருதுகிறார்.

विधवा कबरीबन्धो भर्तृबन्धाय जायते ।
शिरसो वपनं कार्यं तस्माद्विधवया सदा ॥ काशीखण्डम् ।

விதவா கபரீபந்தோ பர்த்ருபந்தாய ஜாயதே ।
ஶிரஸோ வபநம் கார்யம் தஸ்மாத்விதவயா ஸதா ॥ { காஶீ கண்டம் ।

விதவைக்குத் தலையில் கேசமுடியிருந்தால் அது பதியின் பந்தத்தின் பொருட்டாகிறபடியால் அதை எடுத்துவிடவேண்டும். மறுபடி விருத்தியடையாமல் அடிக்கடி எடுத்து விடவேண்டும் என்று காசிகண்டம் வெளியிடுகின்றது.

न ग्राह्यत्वं न देयत्वं स्त्रियः पत्युरनन्तरम् ।
न दाता न गृहीता वा न पाणिग्रहणं पुनः ॥

ந க்ராஹ்யத்வம் ந தேயத்வம் ஸ்த்ரிய: பத்யுரநந்தரம் ।
ந தாதா ந க்ருஹீதா வா ந பாணிக்ரஹணம் புந: ॥

பதி மரித்தபிறகு ஸ்திரீகளுக்கு கிரகிக்கக் கூடிய வஸ்துவுமில்லை கொடுக்கக்கூடிய வஸ்துவுமில்லை அவர்களை தானமாகக் கொடுக்கவும் கூடாது. கிரகிக்கவும்கூடாது மறுபடியும்விவாகத்திற்குஅவள் அருகமுள்ளவளல்ல என்று ஒரு ஸ்மிருதி போதிக்கின்றது.

सकृज्जल्पन्ति राजानः सकृज्जल्पन्ति पण्डिताः ।
सकृत्कन्या प्रदीयन्ते त्रीण्येतानि सकृत्सकृत् ॥

ஸக்ருஜ்ஜல்பந்தி ராஜாந: ஸக்ருஜ்ஜல்பந்தி பண்டிதா: ।
ஸக்ருத்கந்யா ப்ரதீயந்தே த்ரீண்யேதாநி ஸக்ருத்ஸக்ருத் ॥

அரசர்கள் ஒரு விஷயத்தை ஒரு தடவை தான் சொல்வார்கள். பண்டிதர்களும் ஒரு தடவை தான் கூறுவார்கள். ஸ்திரீகள் ஒரு தடவைதான் விவாகம் செய்துகொடுக்கப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறது. இதனுலும்ஸ்திரீகளுக்கு மறுமணம் கூடாதென்று நன்கு வெளியாகின்றது.

स्त्रीणां पुनर्विवाहस्तु देवरात्पुत्रसन्ततिः ।
स्वातन्त्र्यं वा कलियुगे न कर्तव्यं कदाच न ॥ ब्रह्मपुराणम् ।

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌿𑌵𑌾𑌹𑌸𑍍𑌯 𑌨𑌿𑌷𑍇𑌧𑌾𑌤𑍍𑌤𑍁 𑌕𑌲𑌾𑌵𑌿𑌤𑌿𑌃 ।
𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌵𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌕𑌲𑌿𑌯𑍁𑌗𑍇 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑌦𑌾𑌚𑌨 ॥
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑌾𑌣𑍇 ।

கலியுகத்தில் ஸ்திரீகளுக்கு இரண்டாவது தடவை விவாகம் செய்யக் கூடாது என்று பிர்மாண்ட புராணம் கூறுகின்றது.

कामं तु क्षपयेद्देहं पुष्पमूलफलैः शुभैः ।
न तु नामापि गृह्णीयात् पत्यौ प्रेते परस्य तु ॥ मनुः ।

𑌕𑌾𑌮𑌂 𑌤𑍁 𑌕𑍍𑌷𑌪𑌯𑍇𑌦𑍍𑌦𑍇𑌹𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑍂𑌲𑌫𑌲𑍈𑌃 𑌶𑍁𑌭𑍈𑌃 ।
𑌨 𑌤𑍁 𑌨𑌾𑌮𑌾𑌪𑌿 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍 𑌪𑌤𑍍𑌯𑍌 𑌪𑍍𑌰𑍇𑌤𑍇 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌤𑍁 ॥

ஸ்திரீயானவள் தன் பதியின் காலம் சென்றபிறகு புஷ்பம் கிழங்கு பலம் இவைகளால் ஆகாரத்தைச் செய்துகொண்டு தன் சரீரத்தை மிகவும் இளைக்கும்படி செய்ய வேண்டும். பர்த்தா மரித்த பிறகு பின்னொரு புருஷனுடைய பெயரைக் கூட கிரகிக்கக்கூடாது என்று மனு 5-வது அத்தியாயத்தில் ஸ்பஷ்டமாய் அறிவித்திருக்கிறார்.

இவ்விதம் பல பிரமாண வசனங்கள் விதவாவிவாகம் கூடாதென்று ஸ்பஷ்டமாய் போதிக்கும்பொழுது அவைகளை அற்பமேனும் உற்று நோக்காமல் புறக்கணித்துத் தம் மனதில் தோன்றியதையே பெரிய சாஸ்திரார்த்தமாகவும் அதை அனுஷ்டிப்போர்களுக்கு இவ்வுலகிலும் பரலோகத்திலும் அதிகமான சிரேயஸ் உண்டாகுமென்றும் தாமாகக் கருதிக்கொண்டு விதவாவிவாகம் செய்யவேண்டுமென்றும் அவ்விதவைகள் கிடைக்கா விட்டால் கல்யாணமே செய்து கொள்ளாதீர்கள் என்றும் தர்ம சூக்ஷ்மம் அறியாத பாலர்களுக்குக் கெட்ட காரியங்களைச் செய்யும்படி தூண்டுவதுதானா தர்மோபதேசம். இவர் இந்தக் காரியத்தில் பிரவேசிப்பது அழகல்ல.

இனி இரண்டாவது பக்ஷத்தை விசாரிப்போம். இதை வைதிக கர்மாவென்றும் சாஸ்திரங்களின் முகத்தைப் பார்த்து அவைகள் கூறியபடிதான் செய்ய வேண்டுமென்றும் நான் கருதவில்லை. இக்காலத்திற்கு விதவாவிவாகம முதலிய காரியங்கள் ஏற்பட்டால் லோகக்ஷேமத்தின் பொருட்டாகுமென்று என் மனதில் தோன்றியதை ஜனங்களுக்கும் உபதேசிக்கிறேன்

என்று கூறினாலும் அதுவும் சரியல்ல. சுருதிஸ்மிருதி முதலிய பகவானுடைய ஆக்ஞாரூபங்களான பிரமாணங்கள், விதவாவிவாகம் முதலிய காரியங்களைச் செய்தால் அதிக கஷ்டத்தை அனுபவிக்கும்படி நேரும். ஆகையால் செய்யக்கூடாதென்று தடுக்கும்பொழுது அதற்கு விரோதமாக அந்தக் கெட்ட கார்யங்களைச் செய்யத்தான் வேண்டுமென்றும் அதினால் க்ஷேமமுண்டென்றும் நான் சொல்லுகிறேனென்று ஒருவர் முன் வந்தால் இவர் வார்த்தைக்கு எவ்வளவு மதிப்புஏற்படுமென்பதை நாம் அறிவிக்கவேண்டிய அவசியமில்லை. மேலும் ஒரு விஷயத்தை நம்சொந்த அபிப்பிராயமாக வெளியிட்டால் அதை யாவரும் உசிதமாக அங்கீகரிப்பார்களென்று நாமாகவே எப்படித் தீர்மானம் செய்துகொள்ளுகிறது. இவர் கூறும் விதவாவிவாஹம் முதலான காரியங்களைச் செய்யக் கூடாது. செய்தால் ஆபத்து நேருமேயல்லாமல் அற்பமேனும் சுகம் கிடைக்காதென்று தங்களுடைய அபிப்பிராயமென்று கோடிக் கணக்கான ஜனங்கள் கூறத்தயாராயிருக்கிறார்கள். அவர்கள் அபிப்பிராயம் சரியல்ல. நான் சொல்வதுதான் சரி என்று இவரால் எப்படிச் சொல்ல முடியும். அவ்விதம் இவர் சொன்னாலும் அதை யார்தான் அங்கீகரிப்பார். எவரும் ஒரு அபிப்பிராயத்தை வெளியிட்டால் பொது ஜனங்கள் அதை கௌரவித்து ஆதரவளித்தால் மட்டும் அதற்குப் பெருமையேயல்லாமல் தாமாகவேதமதபிப்பிராயத்திற்கு அதிக கௌரவத்தைக்கொடுத்துக் கொண்டுவியவகாரம் செய்ய முன்வருவது அறிஞர்களின் செய்கையாகுமா? இவ்விதம் சாஸ்திரங்களை விட்டு விட்டு ஒவ்வொருவரும் தனக்குத் தோன்றியதை எல்லாம் தர்மோபதேசமாகச் செய்ய முன் வந்தால் தர்மாதர்ம வியவஸ்த்தை எப்படி நிலைபெறுமென்று ஏன் சற்று கவனிக்கக் கூடாது, இவர் மனதில் தோன்றுவதுதான் தர்மம். பிறர் சொல்வது தர்மமில்லை என்று எப்படிக் கூறமுடியும்.

மேலும் ஹிந்துமதத்திற்காக ஏற்பட்ட சாஸ்திரங்களை இவர் பிரமாணமாகக்கொள்கிறாரா? இல்லையா? பிரமாணமாக அங்கீகரிக்கவில்லை என்று இவர் கூறமுடியாது. சென்ற ஆவணிமீ 22உ மித்திரனில் பகவத்கீதை படியுங்கள் என்று தலைபங்கமிட்டுச் சொல்லப்பட்ட விஷயத்தில் ஹிந்துக்களுக்கு மாத்திரமல்லாமல் முகமதியர்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் கூட கீதையை போதிக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்,

கீதை என்பது எந்த மதத்திற்காக யாரால் ஏற்படுத்தப்பட்டது என்று கவனித்தால் ஹிந்து மதத்திற்காக ஏற்பட்டதென்று யாரும் ஒப்புக்கொள்ளக்கூடியதே. விதவாவிவாகம் முதலிய சில விஷயங்களைக் கூறுங்கால் சாஸ்திரம் பிரமாணமில்லை என்று கருதியவர் கீதையை மாத்திரம் எப்படி அங்கீகரித்தாரோ தெரியவில்லை. அவ்விதம் இவரால் பிரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்ட கீதாசாஸ்திரத்தின் கருத்திற்காவது விரோதமில்லாமல் தர்மோபதேசம் செய்கிறாராவென்று கவனித்தால் அதுவுமில்லை.
கீதையில்

**स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ।**
ஸ்வதர்மே நிதநம் ச்ரேய: பரதர்மோ பயாவஹ: ।

சாஸ்திரங்களில் கூறப்பட்ட அந்தந்த வர்ணாசிரமங்களுக்குற்ற தர்மங்களை அவரவர்கள் சற்றுக்குறைவாக அனுஷ்டித்தாலும் சிரேயஸ்ஸை அடைவார்கள். பிறருககுச் சொல்லப்பட்ட தர்மத்தை நன்கு அனுஷ்டித்தாலும் பாபமதான் ஸம்பவிக்கும்.

**तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।**
**ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥**
தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்திதௌ ।
ஜ்ஞாத்வா சாஸ்த்ரவிதாநோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி ॥

ஆகையால் ஹே அர்ஜுனா இது நல்ல காரியம், இது கெட்ட காரியம் என்று தீர்மானிக்கவேண்டிய விஷயத்தில் சாஸ்திரம் பிரமாணமாகுமேயல்லாமல உன் அபிப்பிராயம் பிரமாணமல்ல. சாஸ்திரம் உனக்கு எந்தக் கர்மாவை எவ்விதம் செய்யும்படி விதிக்கின்றதோ அவ்விதம்தான் நீ செய்ய வேண்டும் என்று ஸ்ரீ பகவான் சொல்லியிருக்கிறார். இவ்விதம இன்னும் பல வசனங்களிருக்கின்றன. இவரைக் காட்டிலும் எவ்வளவோ விஷயங்களில் சிறந்தவனாய் விளங்கும் அர்ஜுனனையே சாஸ்திரவிதிக்குமீறி உன் அபிப்பிராயம் போல் நீ ஒரு காரியத்தையும் நடத்தக் கூடாதென்று சொல்லுமபொழுது இவர் சாஸ்திரங்களைக் கவனியாமல் என் அபிப்பிராயம் என்று கூறுகிறாரே. இதுதானா இவரால் அங்கீகரிககப்பட்ட கீதா சாஸ்திரத்தின கருத்து. ஒரு ஸமயம் கீதா சாஸ்திரம் தமக்கு அவசியமில்லை என்றும் பிறர்களுக்காகச்சொன்னேனென்றும் அல்லது கீதையிலுள்ள இந்த மாதிரி வசனங்களை

நான் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் சொல்லலாம். இவ்விதம்பதிலுரைப்பதைத் தவிர்த்து வேறு சரியான மறுமொழி கூறவியலாதென்பது திண்ணம்.

இவ்விதம் ஹிந்து மதத்திற்கு முக்கியப் பிரமாணங்களான சாஸ்திரங்களைப்பிரமாணமாகநம்பாமல் அவைகளில்கூறியவிதிக்கு மாறுதலாக தர்மோபதேசம் செய்துகொண்டுவரும்இவர் சென்னை பிரஸங்கத்தின முடிவுரையில் ஹிந்துமத உன்னத நோக்கததைப் பின்பற்றி நடக்கும் உண்மை ஹிந்துவாகையால் தான் நானை இவ்விதம் கேட்டுக்கொள்ளுகிறேன் என்று கூறியிருக்கிறார். இவர் செய்திருக்கும் விதவாவிவாஹ உபன்யாசத்திற்கும் இந்த முடிவுரைக்கும் அற்பமாவது பொருத்தமிருக்காவென்பதை யாரும் கவனிக்கலாம். இவர் போல் ஹிந்துமதத்தில் அபிமானமுள்ளவர்களாக மகம்மதியர் கிறிஸ்துவர் முதலான இதர மதஸ்தர்களும் ஏன் ஆகமாட்டார்களோ தெரியவில்லை. ஒரு விதத்திலும் இவர் கூறுவது பொருத்தமாக இல்லை.

(2) இதற்குமேலும், கல்யாணத்திற்குத் தானுக ஸம்மதம் அளிக்காதிருக்கையில் கலயாணம் செய்விக்கப்பெற்ற பத்துப்பதினைந்து வயதுள்ள பெண்களை நான் கல்யாணமான பெண்கள் என்று நம்பமாட்டேன், இவர்களை விதவைகளென்று கூறுவது மதத்திற்குச்செய்யும் அபசாரம் என்றும், மததுஷ்பிரயோகமென்றும நான் கூறுவேன்" என்றும் காந்தி பேசியிருக்கிறார் இதுவும் தவறேயாகும். விவாகத்திற்குப்பெண்களின்சம்மதத்தைக்கேட்டுத் தான் செய்யவேண்டுமென்பதற்கு இவருடைய வாசகைத் தவிர வேருன மகரிஷிகளுடைய அபிப்ராயத்தை ஒன்றையும் காண்கிலோம். பெண்களுக்கு ஒருகாரியத்திலும் ஸ்வாதந்திரியமில்லை என்றும் ஒவ்வொரு சமயத்திலும் அப்பெண்களுக்கு கிட்டினவர்களான சிறசிலர் அவர்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து அவர்களைப் பாதுகாக்கவேண்டுமென்றும்

पिता रक्षति कौमारे भर्ता रक्षति यौवने ।
पुत्रो रक्षति वृद्धत्वे न स्त्री स्वातन्त्र्यमर्हति ॥

பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா ரக்ஷதி யௌவநே ।
புத்ரோ ரக்ஷதி வ்ருத்தத்வே ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யமர்ஹதி ॥

ஸ்திரீயை பால்யத்தில் பிதாவும் யௌவனகாலததில் பர்த்தாவும் வயதுசென்ற காலத்தில் பர்த்தாயில்லாவிட்டால் புத்திரனும்

ரக்ஷிக்கவேண்டும். ஸ்திரீயானவள் ஒரு சமயமும் ஸ்வதந்திரமாக இருக்கக்கூடாது என்றும் இதை அநுஸரித்தே

बालया वा युवत्या वा वृद्धया वापि योषिता ।
न स्वातन्त्र्येण कर्तव्यं किंचित् कार्यं गृहेष्वपि ॥

பாலயாவா யுவத்யா வா வ்ருத்தயா வாபி யோஷிதா ।
ந ஸ்வாதந்த்ர்யேண கர்த்தவ்யம் கிஞ்சித்கார்யம் க்ருஹேஷ்வபி ॥

ஸ்திரீகளால் பால்யம் முதலான காலங்களில் தம் வீட்டிலும் ஸ்வதந்திரமாக ஒரு காரியமும் செய்யக்கூடாது. பின்னும்

बाल्ये पितुर्वशे तिष्ठेत् पाणिग्राहस्य यौवने ।
पुत्राणां भर्तरि प्रेते न भजेत् स्त्री स्वतन्त्रताम् ॥

பால்யே பிதுர்வசே திஷ்டேத் பாணிக்ராஹஸ்ய யௌவனே ।
புத்ராணாம் பர்த்தரி ப்ரேதே ந பஜேத் ஸ்த்ரீ ஸ்வதந்த்ரதாம் ॥

பால்யகாலத்தில் பிதாவினுடைய ஆக்ஞையிலும் யௌவன சமயத்தில் பர்த்தாவினுடைய சாஸனத்திலும் பதியின் காலம் சென்றபிறகு புத்ரனிடத்திலும் இருந்துகொண்டு அவர்களின் சாஸனப்படி நடக்கவேண்டுமேயல்லாது தன் இஷ்டம்போல் ஒரு காரியத்தையும் ஒரு ஸ்திரீ நடத்தக்கூடாது என்றும்

यस्मै दद्यात् पिता त्वेनां भ्राता चानुमते पितुः ।
तं शुश्रूषेत जीवन्तं संस्थितं च न लंघयेत् ॥

யஸ்மை தத்யாத் பிதா த்வேநாம் ப்ராதா வாநுமதே பிது: ।
தம் ஶுஶ்ரூஷேத ஜீவந்தம் ஸம்ஸ்திதம் ச ந லங்கயேத் ॥

தன் பிதாவோ, பிதாவினுடைய அநுமதிபெற்ற சகோதரனோ, ஒரு ஸ்திரீயை எந்தப்பதியையும் பொருட்டு கொடுக்கிறார்களோ அந்தப்பதிக்கு ஜீவன் உள்ளவரையில் நன்கு பணிவிடை செய்ய வேண்டும். அவன் மரித்த பிறகும் விதவையாகிய தனக்குற்ற நியமங்களிலிருந்தும் தாண்டக்கூடாது என்றும் மனு 5-வது அத்யாயத்தில் விரிவாய்க் கூறியிருக்கிறார். இதனால் ஸ்திரீகளுக்கு விவாகம் முதலிய காரியங்களில் பிதாமுதலியவர்களுடைய அபிப்ராயம்போல் நடத்தவேண்டுமேயல்லாமல் ஸ்திரீகளின் சம்மதத்தைச்சற்றும்கவனிக்கவேண்டுவதில்லை என்று நன்கு விளங்கவில்லையா? ஸ்திரீகளின் அபிப்ராயத்தை முக்யமாக கவனித்தால் அழகுவாய்ந்த புருஷனை அவர்கள் கவனிப்பார்களேயல்லாமல் முக்கியமாய் வேண்டிய குலம், சீலம், வயது, வித்யை, பொருள்,

முதலியவைகளை கவனிக்கமாட்டார்கள். இவ்விதமே இன்னும் பல மகரிஷிகளும் வெளியிட்டிருக்கிறார்கள். இவைகளுக்கு முறணாக விவாஹகாலத்தில் ஸ்திரீகள் தானாக சம்மதம் அளிக்கவேண்டுமென்று காந்தி எந்த ஆதாரத்தைக்கொண்டு சொல்லுகிறாரோ தெரியவில்லை. ஒரு சமயம் தம்மையும் மனு, யாக்ஞவல்கியர், பராசார், வசிஷ்டர் முதலான மகரிஷிகளுக்குள் ஒருவராகக் கருதி இவ்விதம் அபிப்பிராயம் கொடுத்திருந்தால் அதற்கு ஒருவரும் மறுமொழி கூற முன்வர நியாயமில்லை.

(3) மறுபடியும் "ஹிந்துமதத்தின் கருத்து என் மனதில் ஊறிக்கிடக்கிறது. நான் மேல்நாட்டு உணர்ச்சிகொண்டு இவ்வாறு பேசவில்லை. கலப்பற்ற இந்திய உணர்ச்சியே என் மனதில் நிறைந்திருக்கிறதென்று நான் கூறுகின்றேன்" என்றும் இவர் இங்கு கூறியுள்ளார்.

இவ்விஷயம் எதற்காகக் கூறவேண்டும். இவர்களுக்கு ஹிந்து மதத்தின் கருத்து மனதிலில்லையென்றும் மேனாட்டு உணர்ச்சி அதிகமென்றும் யாராவது சந்தேகப்பட்டால் அதற்கு இவ்வசனம் விடையாகும். அவ்விதம் ஒருவரும் ஸந்தேகிக்காத ஸமயத்தில் இவர்களாக எனக்கு ஹிந்துமதத்தின் கருத்து மனதிலதிகமிருக்கென்று சொல்வதைப்பார்த்தால் இவருக்கே மனதில் சங்கையேற்பட்டு அதற்கு மறுமொழியாகக் கூறியிருப்பதாகத்தெரிகின்றது. அஃதாவது இதுவரையில் நம்மால் கூறப்பட்ட விதவா விவாகமென்பது ஹிந்துக்களுடைய சாஸ்திரங்களுக்கும் அனுஷ்டானங்களுக்கும் நேர் விரோதமான காரியம். கல்யாணத்தை விதிவிலக்கில்லாமல் தோன்றியபடி ஸ்திரீகளின் அபிப்பிராயம் போல் நடத்துவதென்பது மேனாட்டாருக்கேயல்லாமல் நம் தேசத்தில் தற்காலம் கொஞ்சம் மாறுதலையடைந்திருந்தாலும் ஹிந்துக்களுக்குள்ளும் அதிலும் த்ரைவர்ணிகர்களுக்குள்ளும் சாஸ்திரப்பிரமாணங்களைக்கொண்டே நடைபெற்று வந்துகொண்டிருக்கிறது. அவ்விதம் நடைபெறும் விவாகத்தை விதவையாயிருந்தாலும் இருபதுவயதான ருதுவானஸ்திரீயாயிருந்தாலும் செய்து கொள்ளலாமென்று நாம் வற்புறுத்திக்கூறுவதைக்கொண்டு பலர் இவர்களுக்கு ஹிந்து மதத்தின் கருத்து நன்கு தெரியாமல் மேல் நாட்டில் அதிகப் பழக்கத்தால் விரோதமாக இவ்விதம் கூறுகிறார் என்று கருதினாலும் தமக்கவ்விதமில்லை ஹிந்து மதத்தின் கருத்

தும் தெரியுமென்றும் அதை அனுஸரித்தே விதவாவிவாகத்தைச் செய்யவேண்டுமென்றும் தாம் கூறியிருக்கிறாரென்பதேயாகும்.

உண்மையில் ஹிந்து மதத்தின் வாஸனை அற்பமாகிலுமிருந்தால் இவ்விதம் கூற தைரியமாக ஒருவனும் முன்வர மாட்டான். இவர் கூறியிருப்பதை 'சரி' என்று ஒப்பவும் மாட்டான். ஹிந்து மதத்தின் கருத்துத் தமக்கு நன்கு தெரியுமென்று வார்த்தையால் மட்டும் பேசிவிட்டு மேல் நாட்டாருடைய ஆசாரத்தையே நம் தேசத்திலும் பரவும்படி செய்ய வேண்டுமென்று கங்கணம்பூண்டு இவர்கள் இவ்விதம் உபதேசித்ததாகத் தெரிகின்றது. எவ்வளவு முயற்சி எடுத்தாலும் ஆஸ்திகர்களான ஹிந்துக்களுடைய மனதை அது புண் படுத்துமேயல்லாமல் மாறுதலை அடையும்படி செய்யாதென்பது திண்ணம். எதற்காக இவ்விதம் ஜனங்களை கெட்ட கர்மாவைச்செய்யும்படி ஏவி நரகத்தில்விழுவதற்குற்ற அதர்மோபதேசத்தைச் செய்யமுன் வந்தாரோ தெரியவில்லை? அந்தோ கலியின் விந்தை.

“மறுபடியும் ஓர் பெண்ணுக்குக் குறைந்தபக்ஷம் பதினாறு வயதான பிறகே விவாஹம் செய்ய வேண்டுமென்றுநான் கூறுகிறேன். “இந்தியாவில் இருபது வயதான பிறகும் பெண்களுக்குக் கல்யாணம் செய்யலாம். பிராமணர்கள் தங்கள்பெண்களுக்கு 13. 12. 10 வயதில் கல்யாணம் செய்வதாகக்கேள்விப்பட்டேன் நீங்கள் இப்பால்ய விவாஹ வழக்கத்தை நிறுத்த முடியாவிட்டால் நீங்கள் பிராம்மண்யத்தை இழந்தவர்கள் ஆவீர்கள் என்று நான் கூறுவேன்” என்னும் பிரஸங்கத்தில் கூறியுள்ளார்.

விவாகம் என்னும் இக்கர்மாவை இவர் எந்த மாதிரி கருதி இவ்விதம் கூறுகிறாரென்று அறியமுடியவில்லை. இது வைதிகமான கர்மாவென்றும் இதற்கு விதி விலக்குண்டென்றும் இவருக்குத் தோன்றியிருப்பின் இவர் தாமும் ஹிந்துவென்றும் ஹிந்து மதத்தின் கருத்துத் தமக்கு நன்றாய் தெரியுமென்றும் சொல்லிக் கொள்வது உண்மையானால் இவ்விதம் உபதேசிக்க முன் வர மாட்டார். ஒரு பெண்ணுக்குக் குறைந்த பக்ஷம் 16-வயதான பிறகே விவாகம் செய்ய வேண்டுமென்று நான் கூறுகிறேனென்று அகங்காரத்துடன் மார்தட்டுகிறார். இவர் மனுவா? பராசரரா? அல்லது யாக்ஞவல்கியரா? நான் கூறுகிறேன் என்று மார்தட்டிப் பேசுவதைப் பார்த்தால் 18 ஸ்மிருதி கர்த்தாக்களில் தம்மை ஒரு

530

வராகவோ அல்லது அவர்களைக் காட்டிலும் தாம் மேல்பட்டவராகவோ தம் வாக்கை வேதவாக்காகவோ கருதி தம் வாக்குக்கு விரோதமாக எந்தப் பிரமாண வசனங்கள் கூறினாலும் அவைகளைக் கவனிக்க வேண்டியதில்லை என்றும் அகங்காரங்கொண்டு நான் கூறுகிறேன் என்று சொல்லுகிறார். இவர் கூறிவிட்டால் எவ்விதம் கூறினாலும் யாரும் அவ்விதமே அனுஷ்டிக்கவேண்டும் என்கிற நியமமா? தம் வார்த்தைக்கு எவ்வளவுவரையில் உலகில் கௌரவமிருக்கென்பதை நன்கு அறியாமல் யாரோ சிலர் சில விஷயங்களில் தம் வாக்கை கௌரவிக்கிறார்களென்று கருதி சாஸ்திரவிஷயங்களையும் தாறுமாறாக தர்மதத்வமறியாத பாலர்களுக்கு உபதேசித்து அவர்களைக் கெடுக்கவா இவர் வெளியில் ஸஞ்சாரம் செய்கிறார். உண்மை ஹிந்துவாயும் ஸநாதநதர்மங்களுக்கு ஆதாரமாயுள்ள சாஸ்திரங்களை ப்ரமாணமாகக்கொண்டவனாயுமிருப்பின் எவனாவது 16-வயது ஆனபிறகுதான் விவாகம் செய்யவேண்டும் என்று இக்கொடிய உபதேசத்தைச்செய்ய முன்வருவானா, விவாகமென்பது ஸ்திரீகளுக்கு வைதிகமான ஸம்ஸ்காரமில்லையா? இந்த ஸம்ஸ்காரத்தை இன்ன ஸமயந்தான் செய்ய வேண்டுமென்று கருணாநிதிகளான மஹரிஷிகள் ஸ்பஷ்டமாய் வெளியிட்டிருக்கிறார்களே. அவர்களின் அபிப்பிராயத்தைக் கவனியாமல் தம்மிஷ்டம்போல் ஒரு தர்ம வியவஸ்தை செய்ய முன் வரலாமா? அப்படி வந்து பேசினாலும் அது ஆஸ்திகர்களான பொது ஜனங்களுக்கு எப்படித் திருப்தியை உண்டு பண்ணும் என்கிற இவை முதலான விஷயங்களை இவர் ஏன் கவனிக்கக் கூடாது. இவரால் கூறப்பட்ட ஸ்திரீகளின் விவாக காலமானது மஹரிஷிகளின் கருத்தை அற்பமேனும் பின்பற்றவேயில்லை. அவர்களால் செய்யக் கூடாதென்றும் செய்தால் தோஷமுண்டென்றும் தடுக்கப்பட்ட காலத்தையே இவர் சிறந்த காலமென்று உபதேசிக்கிறார். ஸ்திரீகளின் விவாக காலத்தைச் சாஸ்திரங்கள் எவ்விதம் அறிவிக்கின்றனவென்பதையும் கவனிப்பாம்.

ஸ்திரீகளின் வயதைக் குறிப்பிட்டு சில பெயர்கள்கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன,

अष्टवर्षा भवेत् गौरी नववर्षा च रोहिणी ।
दशवर्षा भवेत् कन्या अत ऊर्ध्वं रजस्वला ॥

அஷ்டவர்ஷா பவேத் கௌரீ நவவர்ஷா து ரோஹிணீ ।
தசவர்ஷா பவேத் கந்யா அத ஊர்த்வம் ரஜஸ்வலா ॥

எட்டாவது வயதிலிருப்பவர்களுக்கு கௌரீ என்றும் 9-வது வயதிலிருப்பவளுக்கு ரோஹிணீ என்றும் 10-வயதிலிருப்பவர்களுக்கு கன்யா என்றும பெயர் கொடுத்திருக்கிறார். விவாஹத்திற்கு கன்யாவஸ்தையிலிருக்கும் ஸ்திரீயையே சாஸ்திரங்கள் உசிதமாகக் கூறுகின்றன. அதற்கு மேல் அதிக வயதானால் அவள் ருதுமதி என்றும் அவள் விவாகத்திற்கு அருகமில்லையென்றும்

गौरीं ददन्नाकपृष्ठं वैकुण्ठं रोहिणीं ददत् ।
कन्यां ददत्ब्रह्मलोकं रौरवं तु रजस्वलाम् ॥

கௌரீம் ததந்நாகப்ருஷ்டம் வைகுண்டம் ரோஹிணீம் ததத் ।
கந்யாம் ததத்ப்ரஹ்மலோகம் ரௌரவம் து ரஜஸ்வலாம் ॥

கௌரீ ரோஹிணீ கன்யகா இவர்களை அதாவது 8, 9, 10 வயதுகளிலிருக்கும் ஸ்திரீகளை விவாகம செயது கொடுககிறவாகள் சிறந்த லோகத்தை அடைகிறார்கள் என்றும் ருதுவான ஸ்திரீயை விவாஹம் செய்து கொடுப்பவன் ரௌரவமென்கிற நரகத்தை அடைகிறானென்றும் மரீசி கூறுகிறார்.

पितृगेहेतु या कन्या रजःपश्यत्यसंस्कृता ।
भ्रूणहत्या पितुस्तस्या सा नारी वृषली स्मृता ॥
यस्तां विवाहयेत् कन्यां ब्राह्मणो मदमोहितः ।
असम्भाष्योह्यपाङ्क्तेयस्सविप्रोवृषलीपतिः ॥ बृहस्पतिः ।
अप्रयच्छन् समाप्नोति भ्रूणहत्यामृतावृतौ । याज्ञवल्क्यः ।
कालेऽदाता पिता वाच्यः । मनुः ।
यावन्तश्चर्तवस्तस्यास्समतीयुः पतिं विना ।
तावत्योभ्रूणहत्यास्स्युस्तस्य योन ददाति ताम् ॥ नारदः ।
अतोऽप्रवृत्ते रजसि कन्यां दद्यात्पिता सकृत् । निर्णयसिन्धुः ।

பித்ருகேஹே து யா கந்யா ரஜ꞉பஶ்யத்யஸம்ஸ்க்ருதா ।
ப்ரூணஹத்யா பிதுஸ்தஸ்யா ஸா நாரீ வ்ருஷலீ ஸ்ம்ருதா ॥
யஸ்தாம் விவாஹயேத் கந்யாம் ப்ராஹ்மணோ மதமோஹித꞉ ।
அஸம்பாஷ்யோஹ்யபாங்க்தேயஸ்ஸவிப்ரோவ்ருஷலீபதி꞉ ।
ப்ருஹஸ்பதி꞉ ।

அப்ரயச்சந் ஸமாப்நோதி ப்ரூணஹத்யாம்ருதாவ்ருதௌ ।
யாஜ்ஞவல்க்ய: ।

காலேऽதாதா பிதா வாச்ய: । மநு: ।

யாவந்தஶ்சர்தவஸ்தஸ்யா: ஸமதீயு: பதிம் விநா ।
தாவத்யோ ப்ரூணஹத்யாஸ்ஸ்யு: தஸ்ய யோ ந ததாதி தாம் ॥
நாரத: ।

அபிதாவ்ருவ்யதே ரஜஸி கந்யாம் ஊட்வாதிதா வ்ருஷலீபதி: ।
நிர்ணயஸிந்து: ।

எந்த ஸ்திரீயானவள் தன் பிதாவினுடைய கிரஹத்தில் விவாகமாகாமல் ருதுவாகிறாளோ அவள் சூத்திர ஸ்திரீ என்று ஸ்மரிக்கப் படுகிறாள்.

அவள் பிதாவிற்கு ப்ரூணஹத்தி என்கிற அதிக தோஷமும் ஏற்படுகின்றது. இந்த ஸ்திரீயை எந்தப் பிராமணன் சாஸ்திரவிதியைக் கவனியாமல் மோகத்தால் கேவலம் போகத்திற்காகவிவாகம் செய்து கொள்ளுகிறானோ அவன் பேசுவதற்கும் ஸஹபோஜனத்திற்கும் அருகமில்லாத சூத்திரஸ்திரீயின் பதியாக ஆகிறான் என்கிற அபிப்பிராயத்தை விரிவாகவும் சுருக்கமாகவும் பிரகஸ்பதி யாக்ஞவல்கியர் மனு நாரதர் கமலாகரபட்டர் முதலானவர்கள் கூறுகிறார்கள். இந்தமாதிரி கூடாதென்று நிஷேதிக்கும் வசனங்கள் பலவிருப்பினும் விரிவிற்கஞ்சி இம்மட்டோடு நிறுத்திக்கொள்கிறோம். இந்த வசனங்களால் ருதுவாகிறதற்கு முன் அவச்யமாகப்பிராமண ஸ்திரீகளுக்கு விவாகம் செய்யவேண்டுமென்றும் அவ்விதம் செய்யாவிடில் அவர்கள் சூத்திரஸ்திரீகளுக்குச் சமானம் என்றும் வைதிக ஸம்ஸ்காரத்திற்கு அருகமில்லையென்றும் ஸ்பஷ்டமாக மஹரிஷிகள் கூறியிருக்க அதற்கு நேர் மாறுதலாக 16 வயதிற்குப் பிறகுதான் விவாஹம் செய்ய வேண்டுமென்று எந்த ஆதாரத்தைக் கொண்டு கூறியிருக்கிறாரென்று தெரியவில்லை காந்திஸ்மிருதியைத் தவிர வேறு ஆதாரமிருப்பின் ஏன் காண்பித்திருக்கக் கூடாது. ஆகையால் இதுவும் அவர் கூறியது சரியல்லவென்று சொல்லாமலே விளங்கும்.

(தொடரும்)

உபபத்திராதிபர்.